
1

## சிறப்பு வரைபடம் 1.4:
## நெருக்கடிக்கு முன்னரான நடைமுறைக் கணக்கிற்கு நிதியிடல் மற்றும் நிதியியல் கணக்கின் நெருக்கடிக்கு பின்னரான இயக்கவாற்றல்

**நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் நிதியிடல்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

நெருக்கடிக்கு முன்னர் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைக்கு நிதியளித்தலானது சில குறிப்பிடத்தக்க தகவல்களை வெளிப்படுத்துகின்றன. 2023ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளில், இலங்கையின் தொடர்ச்சியான நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறைகள் 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் பதிஏனைய முதலீடுகள் (முக்கியமாக தேறிய வெளிநாட்டுக் கடன்கள்), சொத்துப்பட்டியல் முதலீடுகள் மற்றும் நேரடி முதலீடுகள் என்பவற்றினால் பெரும்பாலும் நிதியளிக்கப்பட்டுள்ளன. எனினும், 2020 தொடக்கம் 2022 வரை, சொத்துப்பட்டியல் முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினையும் குறிப்பிடத்தக்க குறைந்தளவு நேரடி முதலீடுகளும் காணப்பட்டன. 2020 தொடக்கம் 2022 வரையிலான காலப்பகுதியில் ஒதுக்குகள் குறிப்பிடத்தக்களவு குறைந்ததன் மூலம் இதை ஈடுசெய்ய வேண்டியிருந்தது. எனினும், நெருக்கடிக்கு பின்னர், வெளிநாட்டுத் துறையின் உறுதிப்படுத்தலுடன் நடைமுறைக் கணக்கு 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் மிகையொன்றினைப் பதிவுசெய்து, ஒதுக்குகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. மேலும், 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில், வங்கித்தொழில் துறை குறிப்பாக அவற்றின் வெளிநாட்டுச் சொத்துக்களைக் கட்டியெழுப்பக்கூடியதாயிருந்தது.